(ஆ) அரசு உடன் நடவடிக்கை எடுத்துபட்டா வழங்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கரா பாளையம் கிராம மஜரா இந்திரா நகரில் வசிக்கும் 24 ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க மேற்படி கிராமம் க.ச. எண். 209/5பி—ல் 0.60.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. பயனடைவோர் பட்டியலில் இருந்த 24 பேர்களில் தகுதியடைந்த 8 பேர்களுக்கு 14—5—90ல் பட்டா வழங்கப்பட்டது. மீதி காலியான இடத்தில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி எஞ்சிய 16 மனைகளுக்கும் தகுதி படைத்தோரைத் தேர்ந்தெடுத்து பட்டாக்கள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி, ஒரு நிமிடம்தான் இருக்கிறது. நேரடியாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டம், சங்கரா பாளையம் ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகரில், இரண்டாண்டு களுக்கு முன்னாலேயே நிலத்தைக் கையகப்படுத்தி...... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் தான் கேட்கச் சொன்னேன்—நேரம் 10-30 ஆகிவிட்டது.

திரு. வே. பெரியசாமி: எனக்குக் கொஞ்ச நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை; இல்லை உட்காருங்கள். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.

2. தகவல் கோரல்—

(அ.) இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில இன்றியமையாத பிரச்சினைகள் பற்றி அவசர முக்கியத்துவம் வாய்ந்தவை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1991 செப்டம்பர் 27]

முதலமைச்சர் அவர்களும், அதுபற்றி தன்னுடைய விளக்கத்தை அவைக்கு அளிக்க வேண்டும் என கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அப்பிரச்சினைகளை எழுப்ப அனுமதியளிக்கிறேன். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிந்த 19—ஆம் தேதி, இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்களைக் காணவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்தில், அவர்களைத் தேடுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் கண்டுபிடிக்கப் பட்டார்களா? பத்திரமாக அவர்களுடைய இருப்பிடம் வந்து சேர்ந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பிரச்சினையைப் பற்றி, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் அவர்களும் ஏற்கெனவே அன்றே பிரச்சினை எழுப்பியிருந்தார்கள். அவரும் இப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன 24 இராமேஸ்வரம் மீனவர்களையும், 4 படகுகளையும் கண்டுபிடிக்கும் பணியில், பெருமுயற்சி மேற்கொண்டு, இராமேஸ்வரம் கடற்கரைப் பிரிவிலிருந்து தனி படகுக் குழுக்கள் அனுப்பப்பட்டு, பன்னாட்டுக் கடல் எல்லைக்கோடு வரை, அவர்களைத் தேடும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், 21-9-91லிருந்து இன்று வரை, கடற்படை, விமான நிலைய அதிகாரிகள் 'ஹெலிகாப்டர் மற்றும் தீவு விமானங்கள் மூலம் அவர்களைத் தீவிரமாகத் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வளவு முயற்சிக்குப் பிறகும், மீனவர்களைப் பற்றிய எந்தவிதப் பயனுள்ள தகவலும் கிடைக்கவில்லை. ஆனால், 23-9-91 அன்று, ஆர். 366 என்ற எண்ணுள்ள படகு, கோடியக்கரை கடல் பகுதியில் காணப் பட்டதாக ஒரு தகவல் கிடைத்தது. ஆனால், படகை சோதனை யிட்டபோது, அதில் காணாமல் போன மீனவர்களான ராமு, மூர்த்தி, சேஷையா மற்றும் அந்தோனி ஆகியோருடைய அடையாள அட்டைகள் மட்டும் கிடைத்தன. மற்ற விவரங்கள் ஏதும் கிட்டவில்லை. எனவே, அனைவரையும் தேடுகிற முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது, மேலும் அரசு இப்பிரச் சினையை மத்திய அரசின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது. அதன்மூலம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதர், இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு, இலங்கைக் கடற்படையினரிடம் நமது மீனவர்களும், படகுகளும் அவர்களால் கைப்பற்றப்பட்

டுள்ளனவா என்பது பற்றி அறிய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். இதுகுறித்து, இலங்கை அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் வடக்கு மங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர் திரு. காசிலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதும் அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 10-ஆம் தேதி, புதுக்கோட்டை வெற்றிடம். கொத்தமங்கலம் என்ற ஊரில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய திரு. க. காசிலிங்கம் என்பவரை அவர் ஏதோ மக்கள் முன்னிலையிலே தொடர்பு வைத்திருந்ததாகவும், அதற்குப் பின்னாலே அவர் இலங்கையினுடைய போராளிகளோடு தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயும் கைது செய்யப்பட்டு, இன்றைய தினத்திலே அவர்கள் ஜாமீனிலே வெளிவந்திருக்கிறார்கள். அவரைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டு இயக்கத்தில், 1987-ஆம் ஆண்டிலிருந்து அதன் மாநிலப் பொருளாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பொதுவாக கலை இலக்கியப் பெருமன்றத்தினுடைய மெம்பராகவும் தி.ப. ஜீவானந்தம் அவர்கள் உருவாக்கிய 'தாமரை' பத்திரிகையில், தொடர்ந்து பல்வேறு கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதியும் இதுபோன்ற முற்போக்கு இதழ்களில் சமூக சேவைகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியவர். அவரைப் போன்றவர்களையெல்லாம், யாருடைய தூண்டுதலின் பேரிலோ அந்த ஆசிரியரை இன்றைய தினத்திலே கைது செய்விக்கப்பட்டு, அவரைச் சார்ந்திருக்கிற அந்த ஆசிரியர்கள் கூட்டு இயக்கம் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மற்றவர்களிடத்திலேயேயும் வற்புறுத்தியும்கூட, விடாமல் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவருடைய தீவிர இயக்கங்களுக்காக அவருக்கும் இலங்கையிலே இருக்கக்கூடிய போராளிகளுக்கும் எந்தவித தொடர்பும் இருக்க சாத்தியமே இல்லை. இப்படிப்பட்ட ஆசிரியர் இயக்கங்கள் போன்ற இயக்கங்களில் இருக்கக் கூடியவர்களைக் காவல் துறையினர் கைது செய்வதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, அவர் பேரில் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று நம்முடைய ஆசிரியப் பெருமக்களை கைது செய்வது, அச்சுறுத்துவது போன்றவற்றிற்குக் காவல்துறை ஈடுபடுவதை நீங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.